1981 மார்ச் 24]

காட்டாம்பூண்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்.

*வினா எண். 453—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கம் துவங்கப்பட்டது முதல் காட்டாம்பூண்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வேலூர் கூட்டுறவு மைய வங்கி மூலம் கறவை மாடு கடன் எத்தனை நபருக்கு வழங்கப்பட்டது ?

(ஆ) வழங்கிய நபர்களுக்கு கடன் தொகையில் மானிய தொகை எத்தனை நபருக்கு வரவு வைக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பன்னிரெண்டு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) பன்னிரெண்டு நபர்களுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : துணைத் தலைவரவர்களே, இந்த மானியத் தொகை அரிசன மக்களுக்கு மட்டும் தரப்படுகிறதா ? அல்லது மற்ற நலிந்த பிரிவினருக்கும் தரப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அந்தச் சங்கத்தில் இருக்கிற தகுதி வாய்ந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்த மானியம் தரப்படுகிறது. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்தின் படி பன்னிரெண்டு உறுப்பினர்கள் 24,000 ரூபாய் அளவுக்கு பெற்றிருக்கிறார்கள். அதில் 9,120 ரூபாய் மானியமாக பன்னிரெண்டு பேர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கறவை மாடு வாங்குவதற்காகச் செய்யக்கூடிய உதவி சிறிய விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயன் படக்கூடிய வகையில் கிடைக்காமல் இருக்கின்றது. இதற்காக மத்திய அரசு ஒதுக்கிய அதிகமான மானியத் தொகைகூட சென்ற ஆண்டு செலவழிக்கப்படாமல் விடுபட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? கூட்டுறவு வங்கிகள் போன்றவை இவ்வாறு சிறிய விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் கடன் கொடுப்பதைப் பொறுத்தவரையில் கொஞ்சம் தாராளமாக கொடுத்து மானியத் தொகையை பூரணமாக பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் அவர்கள் சொன்ன மானியப் பிரச்சினை பற்றி அரசு அனுதாபத்தோடு கவனித்து தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.